Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC.347/2024 PW-1**

Name : தாஸ்
Father / Husband name : அம்மாவாசை
Village : நெய்குப்பி
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 28.10.2025

Complainant present. Accused present. Both side counsel present.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ( நேரம் 04.20 - 05.20 )**

நான் எனக்கு சொந்தமாக இரண்டு கார்கள் உள்ளதாக சொல்லியுள்ளேன், அதற்கு பர்மிட் உள்ளதா என்றால் உள்ளது, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களுக்கு செல்ல உள்ளது. அது சவாரி செல்ல ட்ரிப் சீட்டு எழுதுவேன் என்றால் சரிதான். அதனை கணக்கு பார்த்து தான் எனது மாத வருமானம் ரூ.40,000/-, ரூ.50,000/- என்று சொல்கிறேன் என்றால் சரிதான். அது இல்லாமல் எனக்கு விவசாயத்தில் வருமானம் வருகிறதா என்றால் இல்லை. என்னிடம் கடன் கேட்பவர்களிடம் கடன் கொடுத்து வட்டிக்கு கடன் கொடுப்பேன் என்றால் சரியல்ல, எதிரி அவசர தேவைக்குகேட்டதால் கொடுத்தேன். ஏற்கனவே எதிரிக்கு கடன் கொடுத்துள்ளேனா என்றால் இந்த வழக்கு கடன் இல்லாமல் ஒரு முறை கொடுத்துள்ளேன்.

2. அவ்வாறு கொடுப்பதற்கு ஆவணம் எழுதிவாங்குவேன் என்றால் ஏற்கனவே வாங்கிய கடனுக்க பாண்டு எழுதிக்கொடுத்தார், கடனை திருப்பி செலுத்திய பிறகு பாண்டை திருப்பி கொடுத்துவிட்டேன், இந்த வழக்கு கடனுக்கு காசோலையை கொடுத்தார். எவ்வளவு ரூபாய்க்கு கடன் கொடுத்தேன் என்றால்

வட்டிக்கு கொடுக்கவில்லை, கைமாற்றாக கொடுத்தேன். சட்டப்படி எவ்வளவு ரூபாய் வரை ரொக்கமாக கொடுக்கலாம் என்றால் எனக்கு தெரியாது. காசோலையிலுள்ள தேதியில் காசோலையை எதிரிகொடுத்தார் என்றால் இல்லை, 10.01.2024 அன்று காசோலை கொடுத்தார். கடன் கொடுத்த அன்று ஆவணம் ஏதேனும் வாங்கினேனா என்றால் இல்லை. எதிரி சொந்தமாக கார் வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி காரில் வெளியில் செல்லவேண்டும் என்றால் எதிரி என்னை ஓட்டுநராக அழைப்பார் என்றால் இல்லை.

3. எதிரி காருக்கு ஓட்டுநர் வைத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. எதிரி அவசரத்திற்கு ஓட்டுநராக என்னை அழைப்பார், நான் சம்பளத்திற்கு சென்றுள்ளேன் என்றால் இல்லை, நான் அவ்வாறு சென்றதே இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இரண்டு அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, ஒரு அறிவிப்பு தான் கொடுத்தேன். அந்த அறிவிப்பை எந்த வழக்கறிஞர் மூலம் கொடுத்தேன் என்றால் வழக்கறிஞர் பிருந்தா, சண்முகவேல் ஆகியோர்களின் மூலம் கொடுத்தேன். மேற்படி வழக்கறிஞர்கள் திண்டிவனத்தை சேர்ந்தவர்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் அனுப்பிய அறிவிப்பு எதிரிக்கு சென்று சேரவில்லை என்றால் சரிதான், கதவு மூடப்பட்டிருந்ததாக அறிவிப்பு திருப்பபப்பட்டது. எந்த முகவரிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் உண்மைவிளம்பி, ஆஸ்பிட்டல் ரோடு, ரோசனை என்ற முகவரிக்கு அனுப்பினேன்.

4. வீட்டுக்கதவு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் கதவு மூடப்பட்டிருந்ததாக அறிவிப்பில் எழுதப்பட்டது என்றால் 19.02.2024. எதிரியின் வீடு எனது வீட்டிற்கு எதிரில் உள்ளதால், போஸ்டமேன் எப்போது வருவார் என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, நான் அந்த தெருவில் குடியிருக்கவில்லை. போஸ்ட்மேன் ஒருநாள் சென்று பார்த்துவிட்டு கதவு மூடப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, 7 நாட்கள் வரை

பார்த்துவிட்டு அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 7 நாட்களும் போஸ்ட்மேன் சென்று பார்த்ததாக உள்ளதா என்றால் இல்லை. அறிவிப்பு வாசகங்கள் நான் சொல்லி எழுதினார்கள் என்றால் சரிதான். அறிவிப்பில் 4 வது பாராவில் வட்டி மற்றும் அசல் அக்டோபர் 2023 வரை செலுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

5. அறிவிப்பில் இரண்டு நபர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது, ஒருவர் எதிரி மற்றொருவர் யார் என்றால் நான் எதிரிக்கு மட்டும் தான் அறிவிப்பு அனுப்பினேன். அறிவிப்பில் பத்தி 3, 4 ல் Both என உள்ளது என்றால் எனக்கு ஆங்கிலம் தெரியாது. இந்த வழக்கில் புகார் ஆங்கிலத்தில் கொடுத்தேனா அல்லது தமிழில் கொடுத்தேனா என்றால் ஆங்கிலத்தில் கொடுத்தேன். நான் வழக்கு தாக்கல் செய்யும்போது என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான், நான் சொல்லி தயார் செய்யப்பட்டு, என்னிடம் படித்து காண்பிக்கப்பட்டது. ஆங்கிலத்திலுள்ள புகாரை நான் படித்து பார்த்தேனா அல்லது வழக்கறிஞர் என்னிடம் படித்துக்காண்பித்தாரா என்றால் வழக்கறிஞர் படித்து தமிழில் சொன்னார். மேற்படி விவரம் புகாரில் குறிப்பிட்டு இல்லை என்றால் அதிலுள்ள என்னிடம் படித்து காண்பிக்கப்பட்டது.

6. ரூ.5,00,000/- எதிரியின் கணவரின் மருத்துவ சிகிச்சைக்காக கடன் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அறிவிப்பில் 2வது பத்தியில் எதிரி மற்றும் அவரின் மகளும் ஏப்ரல் 2023 ல் படிப்பு செலவு சம்மந்தமாக கடன் கேட்டதாக உள்ளது என்றால் சரியல்ல, மருத்துவ செலவிற்காக கடன் கொடுத்தேன். அறிவிப்பில் 20.04.2023 தேதி குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்தாக உள்ளது என்றால் சரியல்ல, நான் வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை. அறிவிப்பில் வட்டி என குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான். 5 மாதம் வட்டியும் வாங்கவில்லை என்றால் சரிதான். அதன்பின்னர் நான் எதிரியிடம் கடன் குறித்து கேட்டேனா என்றால் கேட்டேன்,

எதிரி என்னை திட்டினார், நான் ரோசனை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் 05.01.2024.

7. போலிசார் புகாரை பதிவு செய்து நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை, விசாரித்தபோது எதிரி நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாக கூறினார். ரோசனை காவல் நிலையத்தில் 05.01.2024 அன்று புகார் எழுதிகொடுத்தேனா என்றால் எழுதிகொடுத்தேன், அவர்கள் பதிவு செய்து சிஎஸ்ஆர் ரசீது கொடுத்தார்கள். சிஎஸ்ஆர் ல் என்ன எழுதினார்கள் என்றால் நீதிமன்றத்தில் தீர்வு காணும்படி எழுதினார்கள். அவ்வாறு எந்த தேதியில் எழுதினார்கள் என்றால் நீதிமன்றத்தில் தீர்வு காணும்படி எழுதினார்கள். அவ்வாறு சொன்னதற்கு எங்கள் இருவரிடம் எழுதி வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். ரோசனை காவல் நிலையத்திற்கு நானும் எனது மனைவியும் சென்றபோது எதிரியுடன் யார் வந்தார்கள் என்றால் எதிரியின் தம்பி வந்தார். இருதரப்பினரையும் விசாரித்த பிறகு கையொப்பம் வாங்கிகொண்டு சிஎஸ்ஆர் முடித்துவிட்டார்கள் என்றால் சரிதான், நீதிமன்றத்தில் தீர்வு காணும்படி எழுதினார்கள்.

8. அதன்பின்னர் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் திண்டிவனம் நீதிமன்றத்தில் எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு எண் என்றால் நினைவில்லை. அந்த வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் அது இந்த வழக்கு தான், அது நிலுவையில் உள்ளது. ரோசனை காவல் நிலையம் தவிர வேறு எந்த காவல் நிலையமும் செல்லவில்லை என்றால் சரிதான். எஸ்பி அலுவலகம் சென்றேனா என்றால் சென்று வந்தேன், ரோசனை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். ரோசனை காவல் நிலையத்தில் சிஎஸ்ஆர் முடித்த பிறகு வேறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி விவரங்களை புகார் மற்றும் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. அறிவிப்பில் எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்தது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அறிவிப்பு 5 ம் பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எஸ்பி அலுவலகத்தில் இருதரப்பினரையும் விசாரித்து எதிரி 3 நாட்களில் பணம் கொடுத்துவிடுவதாக சத்தியம் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதன்பின்னர் நான் எனது புகாரை வாபஸ் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. ரோசனை காவல் நிலைய ஆவணங்களை வரவைத்து பார்த்தால் விசாரணையில் நடந்த விவரம் தெரியும் என்றால் சரிதான். ரோசனை காவல் நிலைய ஆவணங்களை வரவைத்து பார்த்தால் எனக்கு எதிராக உள்ளதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, சிஎஸ்ஆர் ரசீது, எஸ்பி அலுவலகத்தில் கொடுத்த நோட்டிஸ் அசல் என்னிடம் உள்ளது. எந்தயிடத்தில் எதிரி என்னிடம் காசோலை கொடுத்தார் என்றால் எதிரியின் வீட்டில் என்னை வரவைத்து கொடுத்தார். எதிரி கொடுத்த காசோலை எந்த வங்கியுடைது என்றால் ஸ்டேட்பேங்க் ஆப் இந்தியா. காசோலையை கிராஸ் செய்து கொடுத்தார்களா என்றால் கவனிக்கவில்லை, எதிரி பூர்த்தி செய்து கையொப்பம் செய்து கொடுத்தார்.

10. காசோலையை எந்த பேனாவினால் பூர்த்தி செய்தார் என்றால் அவர் உள்ளே எடுத்து பூர்த்தி செய்தார், எந்த பேனா என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் வழக்கின் காசோலையில் S.உண்மைவிளம்பி என்று கையொப்பம் செய்து, மேலே அவரின் பெயர் எழுதப்பட்டுள்ளது, இரண்டும் வெவ்வேறு இங்க் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி காசோலை கொடுத்த வங்கியில் எனக்கு கணக்கு உள்ளதா என்றால் இல்லை. அறிவிப்பில் இரண்டு நபர்கள் என குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அதனால் எனது அறிவிப்பு தவறு என்றால் சரியல்ல. அறிவிப்பில் ரூ.5,00,000/- அசல் மட்டும் கேட்டுள்ளேன், வட்டி கேட்கவில்லை என்றால் சரிதான். அறிவிப்பு பெற்ற 15 நாட்களில் 24 சதவீதம் வட்டியுடன் திரும்ப செலுத்தவேண்டும் என்று உள்ளது என்றால் சரியல்ல.

11. எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை, காசோலையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியின் வீட்டில் கார் ஓட்டுநராக வேலை செய்தபோது எதிரியின் 2 காசோலைகள் காணாமல் போனதால் பணபட்டுவாடா நிறுத்திவைக்க சொல்லி எதிரி அவரின் வங்கிக்கு எழுத்துமூலமாக புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி காணாமல் போன 2 காசோலையில் வழக்கின் காசோலை ஒன்று என்றால் சரியல்ல. அதனால் தவறான தகவலுடன், தவறான முகவரிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி மற்றும் அவரின் மகள் என்னை கொலை செய்வதாக மிரட்டியதால் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. எதிரி என்மீது கந்துவட்டி புகார் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. இருதரப்பிலும் கொடுத்த புகார் மற்றும் நடவடிக்கைகளை குறித்து ஆவணங்களை பார்த்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். எதிரி காவல் நிலையம் மற்றும் வங்கி மேலாளருக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் தெரியாது.

12. மேற்படி அறிவிப்பை நானும் எனது மனைவி, கதிர் வாங்கவில்லை என்றால் சரியல்ல. இதற்கு உடந்தையாக இருந்த அருள் அறிவிப்பை பெற்றார் என்றால் தெரியாது. அருள் அந்த அறிவிப்பிற்கு பதில் அனுப்பவில்லை என்றால் தெரியாது. அனைத்து விவரமும் தெரியும் என்றால் சரியல்ல. இதற்கு முன்பு கந்துவட்டிக்கு கடன் கொடுத்து ஜீபே மூலம் வட்டி மட்டும் வந்துள்ளது என்றால் சரியல்ல. போலிசார் என்மீது கந்துவட்டி நடவடிக்கை எடுக்காமல் இருக்க எதிரியிடம் பேசி சமரசமாக செல்லுமாறு என்னை அறிவுறித்தினார்கள் என்றால் சரியல்ல. எதிரி மற்றும் அவரின் மகளுக்கு என்ன வயது என்றால் எனக்கு தெரியாது. எதிரிக்கு யாரும் ஆதரவில்லை, எதிரி அறிவிப்பு அனுப்பிய நான்கு பேரும் பயந்து கந்துவட்டி நடவடிக்கை

எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் நான் ஜோடித்தது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**